**O.S. No. 19/2025**
**Date :20.02.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 2 **திரு. கெப்புசாமி**

**குறுக்கு விசாரணை :**

1. நான் 8–ம் வகுப்பு வரை படித்து இருக்கிறேன் விவசாயம் செய்கிறேன். வாதியை எனக்கு தெரியும். அவர் எனக்கு உறவினர் கிடையாது. விவசாயம் மட்டுமல்லாமல் நான் பள்ளியிலும் வாட்ச்மேனாக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கு குறித்து சம்மன் ஏதும் வரவில்லை. எனக்கு வாதி பிரதிவாதிக்கிடையே என்ன கொடுக்கல், வாங்கல் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். முதலில் ஏழு லட்சம் ரூபாய் பணம் வாங்கிக்கொண்டு சொத்தை ஈடு கடனாக எழுதிக் கொடுத்திருந்தார். அதன் பிறகு தன்னால் பணம் கொடுக்க இயலவில்லை என்றும், சொத்தி விற்கப் போவதாகச் சொல்லி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார்.

2. நான் மேற்கண்ட விபரத்தை முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பத்திர அலுவலகத்தில் சாட்சி கையொப்பம் போடுவதற்கு என்னை அழைத்து வந்தது அருணா தேவி மற்றும் முருகன். எனக்கு முருகனை சிறுவயதிலிருந்தே தெரியும். மேட்டுப்பட்டிக்கு நான் ஆட்களை அழைத்துச் செல்வதற்கு செல்லும் வகையில் எனக்கு அருணா தேவியை சிறு வயது முதல் தெரியும். அருணா தேவி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார், அவர் என்ன படித்திருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

3. அருணா தேவியின் கணவர் யார் அவரைப் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தபோது யார், யார் உடன் இருந்தார்கள் என்றால் மாடசாமி மற்றும் இளங்கோ இருந்தார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லும் தேதியில் மொத்தம் எத்தனை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஈடு கடன் பத்திரம் வாபஸ் வாங்கிக்

கொண்டு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மொத்த இரண்டு ஆவணங்கள் அன்றைய தினம் ஏற்பட்டது. நான் இரண்டு ஆவணங்களிலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. என்னுடன் இருந்த நபர்களும் அவ்வாறு சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இளங்கோவன் உடனிருந்தார், கையெழுத்து ஏதும் போடவில்லை. என்னுடன் மாடசாமி என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். நான் சாட்சி கையெழுத்து போடும்போது மாலை சுமார் 03.00 – 04.00 மணியிருக்கும், அது உத்தேசமான நேரம் தான். எனக்கு குறிப்பிட்டு ஞாபகம் இல்லை, பத்திர அலுவலகத்திற்கு காலையிலேயே சென்று விட்டோம். பத்திர அலுவலகத்தில் மதியத்திற்கு மேல் கையெழுத்து போட்டோம். ஈடு கடன் பத்திரம் எழுதி, ரசீது போட்டு எவ்வளவு நேரம் கழித்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு நேரம் ஞாபகம் இல்லை. ஈடு கடன் பணப்பற்று ரசீது ஏற்படுத்தப்பட்டு எவ்வளவு நேரம் கழித்து கிரையஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு நேரம் ஞாபகம் இல்லை. நான் வாதி முருகனுக்கு தெரிந்தவர் என்பதால் அவர் ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு ஆவணம் எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம் தெரியாமல் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.20 15:17:22 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.